**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 256 of 2025

Depositions of PW -1 witness for ________ Prosecution / Defence / Court

Name : கருப்புசாமி

Father's Name : சின்னையாகவுண்டர்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th **day of November** 2025.

**(1 – 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் கோவை மாவட்டம் காடுவெட்டிபாளையம், நடுதோட்டத்தில் குடியிருந்து கொண்டு தறிக்குடோன் வைத்து தொழில் நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது தோட்டத்திற்கு அருகில் உள்ள தோட்டத்தின் உரிமையாளர்கள். கடந்த 28.05.2020 ஆம் தேதி எனது மனைவி பாக்கியலட்சுமி அவர்கள் எனது தோட்டத்தில் காலையிலிருந்து மாடு மேய்த்துக் கொண்டிருந்த பொழுது மதியம் சுமார் 12.15 மணியளவில் இரண்டாம் எதிரி ரங்கசாமி எனது வேலிக்குள் இருந்த மரங்களுக்கு களைக்கொல்லி அடித்துள்ளார். எனது மனைவி இரண்டாம் எதிரியிடம் ஏன் எனது தோட்டத்தில் வேலிக்குள் இருக்கும் மரங்களுக்கு மருந்து அடிக்கிறீர்கள் என கேட்டுள்ளார். மேலும் எனது மனைவி இரண்டாம் எதிரியிடம் என்னுடைய பகுதிக்குள் உள்ள செடிகளுக்கு களைக்கொல்லி அடித்தால் அதனை மாடு உட்கொண்டால் இறந்துவிடும் என கூறியுள்ளார். இரண்டாம் எதிரி நான் அப்படித்தான் தேவடியா மகளே, கண்டாரோலி மகளே உன்னை குடும்பத்துடன் நிம்மதியாக

இருக்க விடமாட்டேன் என பேசி உள்ளார். பின்னர் 1 மற்றும் 3 எதிரிகளும் அங்கு வந்து அவர்களும் எனது மனைவியை திட்டி உள்ளார்கள்.

2. 1ம் எதிரி மற்றும் 2ம் எதிரி இருவரும் மீண்டும் களைக்கொல்லி மருந்து எங்கள் வேலிக்குள் இருக்கும் மரங்களுக்கு அடிப்போம் என்றும் அப்பொழுதுதான் கால்நடைகள் சாப்பிட்டுவிட்டு இறந்துவிடும் எனவும் சொல்லியுள்ளார்கள். எனது தோட்டத்தில் சிசிடிவி பதிவான பதிவுகளை போலீசாரிடம் கொடுத்துள்ளேன். சம்பவம் நடந்த தினத்தன்று நான் வெளியில் இருந்தேன். எனது மனைவி எனக்கு சம்பவம் தெரிவித்து நான் 30.05.2020 ஆம் தேதி காவல் நிலையம் நேராகச் சென்று எழுத்து மூலமாக புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் என்னிடம் காண்பிக்கப்படும் CD மற்றும் PEN DRIVE புகாரின்போது என்னால் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது தான் CD **அ.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. PEN DRIVE **அ.சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>ஒன்று முதல் மூன்று எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் குடியிருக்கும் வீட்டிற்கும் கருமத்தம்பட்டி காவல் நிலையத்திற்கும் சுமார் 8 கிலோமீட்டர் இருக்கும். புகார் நான் 30.05.2020 ஆம் தேதி கொடுத்தேன். சம்பவமானது எந்த தேதியில் நடைபெற்றதாக நான் என்னுடைய புகாரில் சொல்லி உள்ளேன் என்றால் 28.05.2020 ஆம் தேதி நடைபெற்றதாக சொல்லி உள்ளேன். ஏன் நான் இரண்டு நாட்கள் காலதாமதமாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சம்பவம் நடந்த பொழுது நான் வெளியூரிலிருந்து இரண்டு நாட்கள் கழித்து வந்து காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நான் இரண்டு நாட்கள் சென்னை சென்று இருந்தேன். எனது சொந்த வேலையாக சென்று இருந்தேன். நான் சென்னையில் தங்கியதற்கான ஆதாரங்கள் உள்ளதா என்றால் ஆதாரங்கள் இல்லை. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது மனைவி மூலமாகவும் வீடியோ பதிவுகளையும் பார்த்து தெரிந்து கொண்டேன்.

2. நான் புகாரில் அளித்துள்ளவாறு எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றும் எனது மனைவி என்னிடம் பொய்யாக சொல்லி உள்ளார் என்றால் சரியல்ல. CCTV பதிவுகள் HARD DISC கொண்டு சென்று கம்ப்யூட்டர் சென்டரில் கொடுத்து CD மற்றும் PEN DRIVE ல் பதிவேற்றம் செய்தேன். நான் சென்னையில் இருந்து எப்பொழுது ஊருக்கு வந்தேன் என்றால் 29.05.2020 ஆம் தேதி இரவு வந்தேன். நான் காவல் நிலையம் எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 30.05.2020 ஆம் தேதி காலை சுமார் 10 மணியளவில் சென்றேன். போலீசார் எப்பொழுது என்னுடைய புகாரை பெற்றுக் கொண்டார்கள் என்றால் காலை சுமார் 11.00 மணியளவில் பெற்றுக் கொண்டார்கள். சம்பவ இடத்திற்கு போலீசார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் அன்றைய தினமே காலை

10:30 மணிக்கு சம்பவ இடம் வந்தார்கள்.

3. சம்பவ இடம் எந்த போலீஸ் வந்தார்கள் என்றால் ரமேஷ் குமார் என்ற காவல் உதவி ஆய்வாளர் வந்தார். அப்பொழுது அங்கு யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் எனது தறி குடோனில் பணி செய்யும் பணியாட்கள் இருந்தார்கள். செல்வராஜ், கார்த்திகேயன், பிரபாகரன் மற்றும் முருகேசன் இருந்தார்கள், நானும் எனது மனைவியும் இருந்தோம். எனது மாமனார் கருவலூரை சார்ந்தவர். மேற்படி சம்பவ இடம் வந்த காவல் உதவி ஆய்வாளர் எப்பொழுது சம்பவ இடத்திலிருந்து கிளம்பினார் என்றால் சுமார் 15 நிமிடங்கள் விசாரித்து உடனடியாக கிளம்பிவிட்டார். மீண்டும் மதியம் காவல் உதவி ஆய்வாளர் சம்பவ இடம் வந்தாரா என்றால் மதியம் வரவில்லை.

4. எனது மனைவியை எதிரிகள் திட்டியதை CCTV பதிவுகளை பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் சம்பவம் நடந்த இடத்தில் CCTV கேமராக்கள் இல்லை. CCTV பதிவுகளில் உள்ள தடம் எதிரிகள் மற்றும் எனக்கும் கூட்டு பட்டாவில் இருவருக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பொதுத்தடத்தில் இடையூறாக உள்ள செடி கொடிகளை அகற்றுவதற்கு எதிரிகளுக்கும் உரிமை உண்டு என்றால் சரிதான், எனக்கும் உரிமை உண்டு. மேற்படி செடிகளை அகற்றுவதற்கு மட்டுமே களைக்கொல்லி அடித்தார் என்றால் நான் அதே இடத்தில் மாடு மேய்ப்பேன். என்னிடம் தகவல் சொல்லி அடித்திருந்தால் தவறு இல்லை. மேற்படி களைக்கொல்லிகள் அடித்த இடத்தில் நான் ஆடு, மாடுகள் ஏதேனும் கட்டி வைத்திருந்தேனா என்றால் அப்பொழுது இல்லை. களைக்கொல்லி அடித்ததில் எலுமிச்சை, வேப்பமரம் வறண்டுவிட்டது. வறண்டு விட்ட மரங்கள் CCTV பதிவுகளில் உள்ளது. அதை என்னால் அடையாளம் காட்ட இயலுமா என்றால் இயலும்.

5. சாட்சி வீடியோ பதிவுகளை பார்த்து வேப்ப மரத்தை அடையாளம் காண்பித்தார். வீடியோ பதிவுகளில் உள்ள வேப்பமரம் பொது தடத்தில் உள்ளது என்றால் சரியல்ல, எனக்கு சொந்தமான பகுதியில் கம்பி வேலைக்குள் உள்ளது. கம்பி வேலிக்கு வெளியே நின்று தான் களைக்கொல்லி அடித்துள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் கம்பி வேலிக்கு உள்ளே உள்ள மரத்திற்கு அடித்து உள்ளார்கள். பொதுத்தடத்தை பயன்படுத்துவதற்கு வேப்பமரம் தடங்கலாக உள்ளது என்றால் சரியல்ல. வேப்பமரம் என்னுடைய பகுதிக்குள் தான் இருக்கிறது. சாட்சி இரண்டாவது உள்ள வீடியோ பதிவுகளை பார்த்து எலுமிச்சை செடி இருந்த இடத்தை அடையாளம் காண்பித்தார். இரண்டாவது உள்ள வீடியோக்களிலும் பொதுத்தடத்தில் தான் களைக்கொல்லி மருந்து அடித்தார் என்றால் சரியல்ல, என்னுடைய வேலிக்குள் இருந்த மரங்களுக்கும் அடித்துள்ளார்.

6. சம்பவ இடம் வந்த காவல் உதவி ஆய்வாளர் அவர்களுக்கு சம்பவம் நடந்த இடத்தை நான் அடையாளம் காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். சம்பவ இடத்தை நான் தான்

அடையாளம் காண்பித்தேன். CCTV கேமராக்கள் இருந்த இடத்தை புலன் விசாரணை அதிகாரிக்கு காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். புலன் விசாரணை அதிகாரி அவர்கள் கேமரா பதிவுகள் மற்றும் கேமரா பொருத்தப்பட்டு இருந்த இடத்தை குறிப்பெடுத்துக் கொண்டாரா என்றால் நான் காண்பித்தேன், அவர் குறிப்பு எடுத்துக் கொண்டாரா என்று எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் எனது மனைவியை எதிரிகள் திட்டியதாக சொல்வது பொய் என்றும் மருந்து அடிப்பது மட்டுமே வீடியோக்களில் பதிவாகியுள்ளது என்றால் சரியல்ல. அந்த இடத்தில் CCTV கேமராக்கள் இல்லை. 1 ம் எதிரி சேகர் அவர்கள் என் மீது இடம் சம்பந்தமாக பிரச்சனை இருப்பது குறித்து முதலமைச்சர் தனிப்பிரிவுக்கு புகார் அனுப்பியுள்ளார் என்றால் அது சம்பந்தமாக எனக்கு தெரியாது. என்னை தற்பொழுது வரை யாரும் விசாரிக்கவில்லை, நான் தான் அவர்கள் மீது இரண்டு முறை புகார் கொடுத்துள்ளேன்.

7. நான் புகார் கொடுக்க சென்ற அன்று காவல் நிலையத்தில் ஒன்றாவது எதிரி சேகர் இருந்தாரா என்றால் எதிரிகள் யாரும் இல்லை. நான் புகார் கொடுத்து வீட்டிற்கு சென்ற பொழுது மாலை 4 மணி இருக்கும். நான் இருந்த நான்கு மணி வரை ஒன்றாவது எதிரி சேகர் காவல் நிலையம் வரவில்லை என்றால் வந்தார், நேரம் ஞாபகம் இல்லை. சேகர் உடன் குப்புராஜ் என்பவரும் வந்தார் என்றால் குப்புராஜ் வந்தாரா என்று எனக்கு தெரியாது. காவல் நிலையம் நான் மட்டும் சென்றேன், உடன் யாரும் வரவில்லை. பார்வை மகசர் சாட்சி முருகேசன் எனக்கு உறவினர் என்றால் சரிதான். செல்வராஜ் பிரபாகரன் கார்த்திகேயன் ஆகிய மூன்று பேரும் எங்கள் தறிப்பட்டறையில் வேலை செய்து வருபவர்கள் என்றால் சரிதான். 28.05.2020 ஆம் தேதி மேற்படி சாட்சிகள் செல்வராஜ், பிரபாகரன் மற்றும் கார்த்திகேயன் பணி செய்து வந்தார்களா என்றால் அன்றைய தினமும் அவர்கள் பணி செய்து வந்தார்கள்.

8. மேற்படி எதிரிகள் எனது மனைவியை அசிங்கமான வார்த்தைகளால் திட்டியதாக சொல்லி உள்ள சம்பவத்தின் பொழுது சாட்சிகள் செல்வராஜ் பிரபாகரன் மற்றும் கார்த்திகேயன் மூன்று பேரும் மேற்படி சம்பவத்தை பார்த்தார்கள் என்றால் சரியல்ல, அப்பொழுது அவர்கள் வேலையில் இருந்தார்கள்.

<u>**மறுவிசாரணை**</u> இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.11.13 18:03:17 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**